**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**தேதி: 13.02.2026**

**OS.No.36/2016**

**வழக்கு சாட்சி DW.2– ராஜ், த/பெ. பழனிச்சாமி**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்கச்சொல்லி எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் இல்லை . 2ம் பிரதிவாதி மோகினி அழைத்தன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்குத் தெரியாது . நான் முதல் விசாரணையின்போது என் மூலம் நான் ஒரு பத்திரம் தாக்கல் செய்தேன் என்றால் இல்லை . என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.13 ஆவணம், நான் இதற்கு முன்பு சாட்சியம் அளிக்க வந்தபோது நான்தான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை (சாட்சியிடம் ஆவணத்தை காண்பித்து படிக்கச்சொல்லி கேட்டபோது அந்த ஆவணத்தில் என் கையெழுத்து உள்ளது என்று சாட்சியம் அளித்தார் ). மோகினி, நான் பத்திரத்தில் கையெழுத்து செய்துள்ளதால் சாட்சியம் அளிக்க வாருங்கள் என்று சொன்னதன்பேரில், நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் . நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விபரங்கள் எழுதியுள்ளது என்ற விபரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும் . நான் கையொப்பம் செய்த ஆவணம் , பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்படாதப்பட்சத்தில் பிரதிவாதிகள் போலியாக உற்பத்திச்செய்து என் மூலம் அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய நான் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.02.13 18:10:10 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.